**தலைப்பு 272 – குருணாகல் மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

குருணாகல் மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் குருணாகல் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புத்தளம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில்

உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகத்திற்கும் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களினதும் குத்தகைக்கு வழங்கப்படுகின்ற சொத்துக்களினதும் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்குமான அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | மதிப்பீடு செய்யப்படாததனால் அப்பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு முடியாதுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 17,166,644 பெறுமதியான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இரண்டு ஆண்டுகளுக்கு மேல் காலங்கடந்த வைப்புக்கள் நி.பி 571 இன் பிரகாரம் தற்பொழுது தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| ஏனையவை | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 22 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து ஏனைய மாகாணங்களில் அரசாங்க நிறுவனங்களால் பொது அறிக்கையினை வைத்திருத்தல் மற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவதற்காக சிங்கள மொழியைப் பயன்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், பிரதேச | அரசியலமைப்பின் 22 ஆம் உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

செயலகங்களால் விவசாய அமைப்புக்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் உள்ளடங்கலாக சமூக அடிப்படையிலான அமைப்புக்களுடன் மேற்கொண்ட ஒப்பந்த உடன்படிக்கைகளின் போது அந்த உடன்படிக்கைகளுக்குரிய செயற்திட்டங்களுக்காக உள்ளடக்கப்பட்டிருந்த செயற்திட்ட பொறியிலாளர் மதிப்பீடு ஆங்கில மொழியில் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர்களின் கடனுக்காக 02-18 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்தும் தீர்த்து வைக்கப்படாது ரூபா 564,300 மொத்த தொகையான 05 கடன் மீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இன்னும் தீர்த்து வைக்கப்படாது காணப்பட்டது. | விரைவாக கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடனை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 06 பிரதேச செயலகங்களில் வேலைகளிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட 7 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 566,382 மொத்த தொகையான கடன் மீதி 2019 திசெம்பர் 31 வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இக்கடன் மீதி 01 ஆண்டிற்கும் 19 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. | விரைவாக கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடனை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 03 பிரதேச செயலகங்களில் மரணமடைந்த 03 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 326,945 கடன் பணம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாது 1 ஆண்டிற்கும் 16 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியாகக் காணப்பட்டது. | விரைவாக கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடனை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஹெட்டிபொல நல்லூர் மஹவெவ குளத்திலிருந்து சேற்று மண்ணை அகற்றுவதற்கு வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு நீர் மேடையின் உயர்வான ஓரப்பகுதியில் மண் அகற்றப்பட்டிருந்ததுடன் சேற்றுமண் அதிகமாக குவிக்கப்பட்டிருந்த குளக்கட்டிற்கு அருகாமையிலுள்ள பகுதி தோண்டப்பட்டிருக்கவில்லை. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 யூன் 07 ஆந் திகதிய 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது குவித்து மேடையின் உயர்வான ஓரப்பகுதியிலிருந்து மதிப்பீட்டின் பிரகாரம் 1 ½ மீற்றர் ஆழமான - 3.5 X 3.5 மீற்றர் அளவான பிரதேசத்தில் மண் அகற்றப்பட்டிருந்ததுடன் | குளத்தை ஆழமாக்கும் போது கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குளத்து அணையின் தாழ்ந்த பகுதிகளுக்கு மண் போடுவதற்கு குளத்து நீர் மேடைப் பகுதியில் மண் வெட்டப்பட்டிருந்தது. வான் கதவின் படி மட்டத்தினை கவனத்திற்கு எடுத்து சில இடங்களில் மாத்திரம் 04 அடி அளவான ஆழத்திற்குத் தோண்டப்பட்டு அந்த இடங்களில் நீர் சேர்ந்து நிற்காத வகையில் நிலம் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. பரிசோதனைக் குழிகளை அருகாமையிலுள்ள அந்த மண்ணைப் பயன்படுத்தி மூடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், விவசாய அமைப்புக்களால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பராமரிப்பு பணத்தை செலுத்துவதற்கு முன்னர் அதனை நிறைவேற்றுவதற்கு முடியும் என செயற்திட்டத்தை மேற்பார்வை செய்த பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தார். |

| | | | |
|---|---|---|---|
| | நியாயமற்ற வகையில் ஆழமாக்கியதன் காரணமாக ஒன்றுசேர்ந்து நீர் வடிந்தோடுவதற்கு நீர் மேடையிலிருந்து குளத்திற்கு நடுப்பகுதியில் ஒரு கால்வாய் வெட்டப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (ஆ) | வாரியபொல பிரதேச செயலகத்தால் கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட 02 குளங்கள் தொடர்பாக குளத்திலிருந்து மண்ணை வெட்டி குளக்கட்டிற்கு மண் எடுத்துச் செல்லப்பட்டு குளக்கட்டை தயார்ப்படுத்தும் வேலைகளுக்கான விலை விகிதங்களானது ஒரு கனமீற்றருக்கு ரூபா 486 ஆக இருந்த போதிலும் ரூபா 1,428 ஆகக் கருதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 343,716 மொத்த தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | பொறியியலாளர் மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். | பயவ இஹல வெவகுளம்- குளங்களை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவில்லை. அதற்கிணங்க, மண்ணை வெட்டி குளக்கட்டில் நிரப்புவதற்காக 1428 விலை அலகு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அது தொடக்க கட்டத்தில் மதிப்பீட்டிற்காக ஈடுபடுத்தினேன். எவ்வாறாயினும், அப்பணத்தைப் பயன்படுத்தி கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட குளங்களிலிருந்து அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாது சமூகப் பங்களிப்புடன் அணைக்கட்டைத் தயாரித்தல் மற்றும் ஏனைய நிர்மாண நடவடிக்கைகளில் அதிக அளவான பகுதி இடம்பெற்றுள்ளது.<br><br>எபவலபிடிய கெடுவாவ குளம் - ரூபா 22,673 தொகையான அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை உரிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிட்டு தற்பொழுது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 04 பிரதேச செயலகங்கள் தொடர்பாக பொருத்துக்கல் பிடித்து புனரமைப்புச் செய்யப்பட்ட 36 வீதிச் செயற்திட்டங்களின் பொறியியலாளர் மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 4,706,487 இனால் மதிப்பீட்டுப் பணம் அதிகரித்திருந்ததுடன் அதன் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்தல் வேண்டும். மேலும் பிழையான பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரிப்பதன் மூலம் இடம்பெற்றுள்ள முழு நட்டத்திற்கும் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் களிடமிருந்து மீள அறவீடு செய்தல் வேண்டும். | மஹவ<br>------------<br>வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட HSR புத்தகத்தின் விடய இலக்கம் RSI-017 இம்மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதில் எந்த இடத்திலும் 40N பொருத்துக் கல்லுக்காக விலைகள் என்ன என்பது குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே HSR புத்தகத்தின் விலைப் பகுப்பாய்வு எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலதிக கொடுப்பனவுகளுக்குரிய பணத்திற்காக நிறுத்தி வைத்தல் பணத்தை எதீரீடு செய்வதுடன் மிகுதியான பணம் உரிய அமைப்பிடம் அறவிட்டு எதிர்காலத்தில் அறிக்கை சமர்ப்பிப்பேன்.<br><br>பண்டுவஸ்நுவர (மேற்கு)<br>-------------------------------------------<br>கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படாத 06 செயற்திட்டங்களின் மதிப்பீடுகள் திருத்தப்பட்டு சரியான விலை விகிதத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டது. மிகுதியான 07 வீதிகளுக்காக கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பம் வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 1,053,123 ஆல் மிகையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மிகையாக செலுத்தப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | பணத்தில் ரூபா 770,756 தொகை பிடித்து வைத்தல் பணத்திலிருந்து கழித்துக் கொள்ளப்பட்டது எனத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் பிடித்து வைத்தல் பணம் போதியதல்லாத செயற்திட்டங்களில் மிகுதிப் பணமாகிய ரூபா 282,367 தொகையை வழங்குமாறு ஒப்பந்தக்காரச் சங்கங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டதுடன் அதற்காக இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது. கிரபாவ மற்றும் கொபய்கன் பிரதேச செயலகங்கள் தொடர்பாக பதில்கள் வழங்கப்படவில்லை. |
| (ஈ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எஹடுவெவ பிரதேச செயலகம் தொடர்பாக நிர்மாணிக்கப்பட்ட 24 வீதிச் செயற்திட்டங்களின் பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 1,090,403 இனால் மதிப்பீடு மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த மிகை மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தை கொடுப்பனவு செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. | - மேற்படி - | கல்கமுவ பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட 19 மதிப்பீடுகளில் மிகை மதிப்பீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 568,873 பணத்தை மீண்டும் அரசாங்கத்திற்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபைக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அச்செயற்திட்டங்களுக்கு மத்தியில் "120 ஹித்தேவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் லோகுருகம பிரேமலதா அவர்களின் வீட்டுக்குச் செல்லும் வீதிக்கு கிரவல் பரப்பி புனரமைப்புச் செய்யும்" செயற்திட்டத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை இறுதிக் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | | | எஹடுவெவ பிரதேச செயலகத்தின் மூலம் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட 05 செயற்திட்டங்களிடம் மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை உரிய உடன்படிக்கை செய்யப்பட்ட அமைப்புக்களுக்கு மீள அரசாங்கத்திற்குச் செலுத்துமாறு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. |
| (உ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்கமுவ பிரதேச செயலகம் தொடர்பாக கிரவல் இட்டு தயாரிக்கப்பட்ட 09 வீதிச் செயற்திட்டங்களின் பொறியியலாளர் மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக ரூபா 536,069 இனால் செயற்திட்ட கிரயம் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பணத்தை கொடுப்பனவு செய்தல் அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. | - மேற்படி - | இச்செயற்திட்டம் கல்கமுவை பிரதேச சபையின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டமானதுடன் 09 செயற்திட்டங்களில் 06 செயற்திட்டங்களுக்கான மிகைக் கொடுப்பனவுகள் பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 267,640 பணத்தை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டங்களுக்கு மத்தியில் ஒரு செயற்திட்டத்திற்கு இன்று வரை கொடுப்பனவு செய்யப்படவில்லை எனவும் குறிப்பிடுகின்றேன். அவ்வாறே மிகுதி 03 செயற்திட்டங்களுக்கான ரூபா 146,605 பணத்தை அறவீடு செய்வதற்காக கல்கமுவை பிரதேச சபைக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் கொடுப்பனவிற்காக இணங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றேன். |
| (ஊ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதிகளுக்கு கிரவல் இட்டு புனரமைப்புச் செய்யும் போது கிரவலை மோட்டார் கிரேடரினால் பரப்பி அமுக்கும் வேலை விடயத்திற்காக மாகாண | - மேற்படி - | இந்த 14 செயற்திட்டங்களில் 09 செயற்திட்டங்கள் பிரதேச சபையின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களானதுடன் மிகுதி 06 செயற்திட்டங்களில் 02 செயற்திட்டங்களுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | HSR களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை விகிதமானது ஒரு கனமீற்றருக்கு ரூபா 193(R1-123A) தொகைக்குப் பதிலாக ரூபா 401 (R1-123) ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதன்காரணமாக 14 வீதிச் செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 438,672 இனால் மதிப்பீட்டுக் கிரயம் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே இப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | | கொடுப்பனவு செய்யும் போது கழித்துக் கொடுப்பனவு செய்வதற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. ஏனைய 04 செயற்திட்டங்களுக்காக மீள அறவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (எ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிரிபாவ பிரதேச செயலகம் தொடர்பாக புனரமைப்புச் செய்யப்பட்ட 05 நீர்ப்பாசனச் செயற்திட்டங்களின் பொறியியல் மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 2,457,550 மிகை மதிப்பீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | - மேற்படி - | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதானது இயந்திரத்தினால் மண்ணை வெட்டி அணைக்கு எடுத்துச் சென்று உதருகின்ற உருளையினால் அமுக்குவதற்கு ஒரு கன மீற்றருக்கு ரூபா 486 விலை விகிதம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். எனினும், எங்களின் குளங்களை புனரமைப்புச் செய்யும் போது இடம்பெற்றதானது காணப்படுகின்ற அணைகள் மண்ணைப் பயன்படுத்தி புனரமைப்புச் செய்யப்பட்டதாகும். இதற்காகப் பயன்படுத்தப்பட்டது D4 டோசர் இயந்திரமாகும். அதன் மூலம் மட்டத்திற்கு இணங்க வெட்டி பெகோ இயந்திரத்தின் மூலம் உழவு இயந்திரங்களுக்கு ஏற்றி அணைக்கு பயன்படுத்தி மீண்டும் டோசர் மூலம் பரப்பி நீரைப் பயன்படுத்தி மீண்டும் டோசர் மூலம் அணைக்கட்டின் மேற்பரப்பை அமுக்குவதற்கு உட்பட்டிருத்தல். மேலும், |

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா 1,660 விலை அதற்காக பயன்படுத்தப்பட்டதுடன் குளங்களில் மண்ணை அகற்றி குளங்களுக்குள்ளேயே குவிப்பதற்கு இருந்த பல சந்தர்ப்பங்களில் பெகோ இயந்திரத்தின் மூலம் வெட்டப்பட்ட மண் குளத்து அணைக்கட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பெகோ இயந்திரத்தின் மூலம் குளத்தின் அணைக்கட்டிலிருந்து மேற்பரப்பிற்கு பரப்புதல் இடம்பெற்று இயந்திரத்தினைப் பயன்படுத்தாது காபசோல் மூலம் மனித வேலையின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களுக்காக ஒரு கன மீற்றருக்கு ரூபா 580 பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், விலைப் பகுப்பாய்வு செய்யப்படாததனால் வழங்கப்பட்ட விலை விகிதத்திற்குரிய வேலைக் கட்டங்களும் ஈடுபடுத்தப்பட்ட இயந்திரங்களின் விபரங்களும் போதியதல்லாததனால் ஒவ்வொரு வேலை விடயங்களுக்கும் பொருந்தக் கூடியதாக மற்றும் குளத்தின் அணைக்கட்டின் நீளம் அகலம் மற்றும் வெட்டுதல், எடுத்துச் செல்லும் தூரம் என்பவற்றின் பிரகாரம் விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட்டன. |
| (ஏ) | ரிதிகம பிரதேச செயலகத்திற்குரிய கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான 05 வீதிச் செயற்திட்டங்களுக்குரிய | - மேற்படி - | 4 மதிப்பீடுகள் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டது. அவற்றில் 2019 ஆம் ஆண்டிற்கான கம்பெரலிய |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியலாளர் மதிப்பீட்டினைப் பரீட்சித்த போது 04 மதிப்பீடுகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களுக்குரிய உள்ளபடியான விலை விகிதங்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 468,132 மொத்த தொகையினால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. | | நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 02 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு முடிவுறுத்தப்பட்டன. மிகுதி 02 செயற்திட்டங்கள் திருத்தப்பட்டன. அதற்கிணங்க மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தும் கொடுப்பனவு அறிக்கைகளில் அப்பணத்தைக் கழித்து சரிசெய்யப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (ஐ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் 20 வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கும் போக்குவரத்துக் கட்டணமாக 10 கிலோ மீற்றர் தொடர்பாக மாவட்ட விலை நிர்ணயக் குழுவின் விலையான ரூபா 531 இற்குப் பதிலாக பிழையாக ரூபா 986 ஈடுபடுத்தப்பட்டு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக 651.81 கன மீற்றருக்கு ரூபா 455 வீதம் ரூபா 296,573 அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படும் வகையில் மிகை மதிப்பீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | கம்பெரலிய 2019 நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கல்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் 20 வீதி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பாக பொருட்களை வழங்கும் போக்குவரத்துக் கட்டணமாக இடம்பெற்றிருந்த மிகை மதிப்பீட்டின் அடிப்படையிலான கொடுப்பனவுகளில் ஒரு செயற்திட்டத்திற்கான பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதிச் செயற்திட்டத்திற்கான அறவீட்டிற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஒ) | மாவட்ட விலை நிர்ணயக் குழுவின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு கிரவல்களை வழங்கி குவிக்கும் விலை விகிதத்தினை ஈடுபடுத்தி பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | உடுபத்தாவ<br>--------------------<br>அனைத்து செயற்திட்டங்களுக்குமான பிடித்து வைத்தல் பணத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தின் அளவைக் கணித்து உரிய |

இதன் காரணமாக கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 06 பிரதேச செயலகங்களால் அமுல்படுத்தப்பட்ட 377 வீதிச் செயற்திட்டங்களின் பொறியியலாளர் மதிப்பீடு பிழையாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் ரூபா 6,100,767 இனால் மதிப்பீட்டுப் பணம் அதிகரித்திருந்ததுடன் அப்பணத்தை கொடுப்பனவு செய்யப்பட்டதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

தன்னார்வ அமைப்புக்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அறவீடு செய்வதற்கு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

குருணாகல்
---------------------
ரூபா 1,858 பணத்திற்கு கிரவல் இட்டதனைக் கணித்து சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவு அறிக்கைகளில் அந்த விலை ரூபா 1,232 ஆகத் திருத்தப்பட்டு 13 செயற்திட்டங்களுக்கு மிகை மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 263,962 தொகை அறவீடு செய்யப்பட்டது. 10 செயற்திட்டங்களுக்குரிய விலைப் பட்டியல்கள் கையிலுள்ள விலைப்பட்டியல்களாக காணப்படுவதுடன் அதன் மூலம் ரூபா 180,100 பணம் கழிக்கப்பட்டு தற்பொழுது வவுச்சர்கள் திருத்தப்பட்டுள்ளது எனக் காட்டப்பட்டுள்ளது.

மாஸ்பொத மற்றும் மல்லவபிடிய
---------------------------------------------
கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டவாறு கிரவல் ஒரு கியூப் ரூபா 1,266 பணத்திற்குள் கிரவலை குவிப்பதற்கான கட்டணம் உள்ளடக்கப்படவில்லை எனக் காட்டப்பட்டிருந்தது.

குளியாப்பிட்டி (மேற்கு)
----------------------------------------
136 செயற்திட்டங்கள் சம்பந்தமாக மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா 1,034,549 பணத்தில் ரூபா 142,790 பணம் கையிலுள்ள

| | | | |
|---|---|---|---|
| | | | விலைப்பட்டியல்களாக காணப்பட்டதுடன் அதனை அப்பணத்தைச் செலுத்தும் போது அறவிடப்படுவதுடன் ரூபா 891,759 பணம் அறவிடப்பட்டுள்ளது. |
| (ஓ) | இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில் மெதகெதர கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள ஹீனபாமுல குளத்தை ரூபா 1,261,000 தொகைக்கு புனரமைப்புச் செய்வதற்காக இஹல பெரகும் விவசாய அமைப்புடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. வேலை விடயம் 1.1 இன் கீழ் வான் கதவுகளைத் தயார்ப்படுத்துவதற்காக குளத்து அணைக்கட்டை வெட்டுதலை பெகோ இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு அதற்காக மனிதவேலைகளை ஈடுபடுத்துவதற்காக ஒரு கன மீற்றருக்கு ரூபா 1,615 வீதமான விலையை அடிப்படையாகக் கொண்டு ரூபா 80,750 செலுத்தப்பட்டது. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான நீர்ப்பாசன அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதங்களின் பிரகாரம் ஒரு கனமீற்றர் மண்ணை வெட்டுவதற்கு அங்கீகரித்த விலை ரூபா 109 ஆகும். இந்த விலை விகிதம் பயன்படுத்தப் படுமாகயிருந்தால் செலவு ரூபா 5.450 என்பதனால் அரசாங்கத்திற்கு ரூபா 75,300 சேமிப்பு ஏற்பட்டிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், வேலை விடயம் 1.5 இன் பிரகாரம் குளத்தின் | - மேற்படி - | மெதகெதர கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹீனபாமுல குளத்தை புனரமைப்புச் செய்வதற்காக மதிப்பீட்டினைத் தயாரித்தலானது மேற்பார்வை செய்யும் பிராந்திய நீர்ப்பாசன பொறியிலாளரினால் தயாரிக்கப்பட்டது. அதற்கிணங்க இந்த மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்காக மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான விலைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டது. கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு ரூபா 431,165 பணம் கழிக்க வேண்டியிருந்தது. எனினும், திருத்திய கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் மொத்த கொடுப்பனவு பெறுமதி ரூபா 1,257,414 மற்றும் தொடக்க கொடுப்பனவு பெறுமதி ரூபா 268,827 ஆகும். அதற்கிணங்க திருத்திய கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 11,412 ஆல் செய்த வேலைகளின் பெறுமதி குறைவடைந்துள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். நி.பி 237 இன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட வேலைகள் சம்பந்தமான விசேட சான்றிதழின் பேரில் கொடுப்பனவு செய்வதற்கான இயலுமை இருந்தும் இன்று வரை |

| | | | |
|---|---|---|---|
| | அணைக்கட்டைத் தயார்ப்படுத்துவதற்காக 58.85 கனமீற்றர்கள் வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டது எனக் காட்டி ரூபா 595 வீதம் ரூபா 35,015 செலுத்தப்பட்டிருந்தும் பயன்படுத்தப்பட்ட மண் வெளியிலருந்து அல்லாது குளத்திலிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது. குளத்திலிருந்து மண்ணை அப்புறப்படுத்தும் போது பிழையாக விலை விகிதங்களைப் பயன்படுத்தியதன் காரணமாக ரூபா 431,165 பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | இச்செயற்திட்டத்திற்குரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை எனவும் மேலும் அறிக்கையிடுகின்றேன். |
| (ஔ) | அம்பன்பொல பிரதேச செயலகப் பிரிவில் 05 குளங்களை ஆழமாக்குவதற்காக (சேற்று மண்) வெட்டி குளத்துக்கு அண்மையில் முறையாக குவிப்பதற்காக ஒரு கனமீற்றருக்கு ரூபா 169 தொகையான மாகாண நீர்ப்பாசன அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதமான (ISR) 60:13 விலை விகிதம் பயன்படுத்தப்படாது ரூபா 383.30 தொகை 60:16 ஆம் இலக்க விலை விகிதங்கள் பயன்படுத்தி மொத்தமாக 4,735 கனமீற்றருக்கு ரூபா 1,014,710 தொகை மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 04 நிர்மாண வேலைகளுக்கு ரூபா 768,265 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | 04 செயற்திட்டங்களின் மண்வெட்டி உழவு இயந்திரங்களின் மூலம் மண்களை எடுத்துச் சென்று இறக்கியதன் பின்னர் டோசரின் மூலம் குவிக்கப்பட்டது எனத் தெரிவிக்கின்றேன். ஒரு கன மீற்றருக்கு ரூபா 383.30 என்ற விலை விகிதம் பயன்படுத்தப்பட்டதானது தொழில்நுட்ப உத்தியோகத்தரால் குளத்தில் சுட்டிக் காட்டப்பட்ட இடங்களில் மண்ணை வெட்டி ஏற்றி எடுத்துச் சென்று மீண்டும் நீர் வரும் வழியைத் தடுக்காத வகையில் இறக்கியதன் பின்னர் டோசர்களைப் பயன்படுத்தி அளவீடு செய்யக் கூடிய வகையில் குவித்து தயார்ப்படுத்துவதற்காக வாகும். உங்களால் ரூபா 169 ஆக கொண்டு வரப்பட்டதானது டோசர்களைப் பயன்படுத்தி மண்ணைத் தள்ளி குவிப்பதற்காக என |

| | | | |
|---|---|---|---|
| | | | தயவாகத் தெரிவிக்கின்றேன். அதற்கிணங்க இந்த நான்கு குளங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கின்றேன். எனினும் பொரவெவ பிரிவிலுள்ள தொடம்கொல்லேவ குளத்தை புனரமைப்புச் செய்யும் போது உழவு இயந்திரங்களின் மூலம் இழுத்து டோசரினால் தள்ளுதல் என்ற இரண்டு முறையையும் பின்பற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க டோசரின் மூலம் தள்ளிய மண்ணின் அளவிற்காக மிகையாகக் செலுத்தப்பட்ட ரூபா 81,932 பணத்தை அறவிட்டு கணக்காய்விற்கு அறிவிப்பேன். |
| (க) | அம்பன்பொல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள உடதிவுல்வெவ பிரிவில் பாடசாலைகளுக்கு அருகில் அமைந்துள்ள விகாரைக்கு முன்னால் உள்ள வீதியை புனரமைப்புச் செய்யும் போது உருவாகிய எதிர்ப்பின் காரணமாக மதகுகளுடனான 300x2.7 மீற்றர் பகுதியை இரத்துச் செய்வதனால் ஏற்பட்ட சேமிப்பினைத் தவிர்ப்பதற்கான தேவைப்பாடு இல்லாது 500 மீற்றர் நீளமான பகுதியின் அகலம் 0.9 மீற்றரினாலும் களஅளவு 0.075 மீற்றரினாலும் அதிகரித்ததினால் 213.75 கனமீற்றர் கிரவலை பரப்பி அமுக்குவதற்கு ரூபா 396,284 செலுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. இச்செயற்திட்டத்திற்கான கிரவலானது நாகொலகனே விகாரை வளவில் 212.25 | - மேற்படி - | கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வீதியில் நன்றாக நீர் வழிந்தோடக்கூடியதாக நடுப்பகுதியில் மேடாக இருந்தது என்பதனைக் காணக்கூடியதாக இருந்தது என வெளிப்படுத்தியிருந்தும் வீதியை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் அவ்வாறான நிலை இல்லை என குறிப்பிடுகின்றேன். வீதிக்கான தொடக்க மதிப்பீட்டினை விட கன அளவை அதிகரித்ததானது அது நீண்டகாலம் நிலைத்திருப்பதற்கும் நலன்பெறுநர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்குமாகும். உடதிவுல வெவ பிரிவில் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள விகாரைக்கு முன்னாலுள்ள வீதியை புனரமைப்பது தொடர்பாக ரூபா 62,075 பணத்தை அறவீடு |

| | | | |
|---|---|---|---|
| | கனமீற்றரும் 500 மீற்றருக்கு உள்ளே அருகாமையிலுள்ள காணியிலிருந்து 237.75 கன மீற்றரும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. கிரவலுக்கு விலையிடும் விலை விகிதத்தில் 10 கிலோ மீற்றருக்குரிய போக்குவரத்துக் கட்டணம் உள்ளடக்கப்பட்டிருந்தும் உண்மையான தூரத்தின் அளவின் பிரகாரம் செலுத்த வேண்டியதானது 1 கிலோ மீற்றருக்கு மாத்திரம் என்பதனால் 237.75 கனமீற்றருக்காக 09 கிலோ மீற்றருக்கு ரூபா 339.40 வீதம் ரூபா 80,692 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. இந்த 450 கனமீற்றர் கிரவல் முறையாக அளவீடு செய்யப்பட்டிருக்காததனால் குவித்தல் மற்றும் அளவீடு செய்வதற்காக கன மீற்றருக்கு ரூபா 208 வீதம் ரூபா 93,600 மிகையாகச் செலுத்தப்பட்டது. | | செய்வதற்கு உடன்படிக்கை செய்த அமைப்பிற்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளதுடன் அப்பணத்தை அறவிட்டு எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிவிப்பேன். |
| (கா) | வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மண்ணை உழவு இயந்திரங்களின் மூலம் குளக்கட்டில் போட்டு பரப்புவதற்காக மாகாண நீர்ப்பாசன ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை விகிதம் இலக்கம் (ISR) 12 இன் மூலம் வெட் வரியின்றி மற்றும் வெட் வரியுடன் கனமீற்றருக்கு முறையே ரூபா 580 மற்றும் ரூபா 595 விலையைப் பயன்படுத்தி 10 பிரதேச செயலகங்களின் 40 குளங்களுக்காக மொத்தமாக 20,194 கனமீற்றர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வெட் இல்லாது விலை ரூபா 447 ஆக இருந்ததன் காரணமாக ரூபா 2.426,429 மிகையாக | - மேற்படி - | குளியாபிட்டி (கிழக்கு)<br>----------------------------------------<br>வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் விகிதாசார பகுப்பாய்வுக் குழுவினால் 2019 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட விகிதாசாரத்தைப் பயன்படுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட்டது என தயவாகத் தெரிவிக்கின்றேன். ரஸ்நாயகபுர, உடுபத்தாவ, இப்பாகமுவ, பபுனாகொடுவ, வீரம்புகெதர, கொபோய்கன, பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகங்களின் பதிலின் பிரகாரம் இச்செயற்திட்டத்திற்காக மதிப்பீட்டினைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வை |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மாகாண நீர்ப்பாசன அலுவலகத்தின் மூலம் இடம்பெறுவதுடன் இந்த வெட் உடனான விலை பயன்படுத்தியதன் காரணமாக மேலதிக கொடுப்பனவு இடம்பெற்றுள்ள விடயங்கள் மற்றும் தகவல்கள் கணித்தலுடன் மாகாண நீர்ப்பாசன அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 03 வார காலத்திற்குள் அனைத்து செயற்திட்டங்களுக்கும் செலுத்த வேண்டிய உள்ளபடியான அலகு விலையை கணிக்கலாம் எனத் தெரியப்படுத்தப்பட்டது. மேலும், இந்த மிகையாகச் செலுத்தப்பட்டுள்ள பணம் 10% நிறுத்தி வைத்தல் பண எல்லைக்குள் எதிரீடு செய்யக்கூடியதாக இருந்தது எனவும் அதற்கிணங்க உரிய தகவல்களை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் பெற்று உடனடியாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கின்றேன். |
| (கி) | பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவின் அம்பகஹமுல கால்வாயில் 3,920 கன மீற்றர் மண்ணை வெட்டி கால்வாய் அணையை தயார்ப்படுத்துவதற்கு 2,000 கனமீற்றருக்கு குறைந்த சந்தர்ப்பத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டு கனமீற்றருக்கு ரூபா 340 வீதம் மாகாண நீர்ப்பாசன ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை | - மேற்படி - | டோசர் இயந்திரத்தினைப் பயன்படுத்தி கால்வாயின் அணைக்கு மண் ஈடுபடுத்துதல் இடம்பெற்றிருந்தது. அந்த தயார்ப்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட சில பகுதிகள் இடைக்காலத்தில் காணப்பட்ட அதிக மழையின் காரணமாக நிரப்பப்பட்ட மண் மீண்டும் அணைக்கட்டின் கீழ்ப்பகுதிக்குச் சென்று |

| | | | |
|---|---|---|---|
| | விகிதம் இலக்கம் (ISR) 60.14 விலை விகிதம் பயன்படுத்தப்பட்டு ரூபா 176,400 தொகை வெட் வரியினை உள்ளடக்கி ரூபா 1,332,800 தொகையை செலுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இச் செயற்பாட்டிற்காக ரூபா 175 தொகையான மாகாண நீர்ப்பாசன ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை விகிதம் இலக்கம் (SRI) 60.11 விலை விகிதம் பொருத்தமானது என அவதானிக்கப்பட்டதுடன் அதன் மூலம் ரூபா 646,800 இனால் செலவை குறைக்கக் கூடியதாக இருந்தது. | | நிர்ணயிக்கப்பட்ட வடிவம் மாற்றமடைதல் இடம்பெற்றுள்ளது. டோசர் இயந்திரத்தினைப் பயன்படுத்தி அந்த மண்ணை மீண்டும் ஈடுபடுத்துவதற்கு முடியாத வகையில் நீர் நிரம்பியிருந்ததன் காரணமாக அதற்காக பெகோ இயந்திரத்தை மேட்டுப் பகுதியில் வைத்து செயற்படுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக மேலதிக பெகோ மணித்தியால கணக்கில் விவசாய அமைப்புக்களின் நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது எனவும் செயற்திட்டத்தை மேற்பார்வை செய்த பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களின் அவதானிப்புக்களில் காட்டப்பட்டிருந்தது. |
| (கீ) | நிகவெரடிய பிரதேச செயலனத்தினால் கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட பொருத்துக் கற்கள் பிடித்து வீதிகைளத் தயார்ப்படுத்தும் 22 செயற்திட்டங்களுக்காக பொருத்துக் கற்களை எடுத்தச் செல்வதற்காக 70 கிலோ மீற்றர்களாக நியாயமற்ற அதிக தூரம் கவனத்திற்கு எடுத்து ஒப்பந்தக்காரருக்குச் சாதகமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பல செயற்திட்டங்களுக்காக இந்த பொருத்துக்கல் செயற்திட்ட இடங்களிலிருந்து 15-30 | - மேற்படி - | கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக மதிப்பீடு செய்யும் போது நிவ்டன் 40 அளவிலான பொருத்துக் கற்களை இப்பிரதேசத்தில் தேடிக் கண்டுபிடிப்பது சிக்கலானதன் காரணமாக பொலன்னறுவை மற்றும் குருணாகலிலிருந்து எடுத்து வருவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதன்போது உடன்படிக்கை செய்த அமைப்புக்களின் மூலம் பொருத்துக் கற்களை வழங்குவதற்காக பொலன்னறுவை வரை எடுத்துச் செல்லும் செலவாக கொடுப்பனவு செய்யப்பட்டதானது 70 கிலோ மீற்றர் உச்ச அளவு தூரத்திற்காக மாத்திரமாகும். உரிய ஒப்பந்த அமைப்பினால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிலோ மீற்றர்களுக்கிடைப்பட்ட தூரத்தில் அமைந்துள்ள கொபேய்கன் பிரதேசத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க பொருத்துக்கல் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள / பெற்றுக் கொள்ளக்கூடிய அண்மையிலுள்ள தூரத்தை கவனத்திற் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக மேற்கூறிய 22 செயற்திட்டங்களுக்காக பொருத்துக்கற்களை எடுத்துச் செல்வதற்காக செலுத்தப்பட்ட மொத்த போக்குவரத்துச் செலவான ரூபா 1,336,864 தொகையில் ரூபா 907,158 மிகைக் கொடுப்பனவு அவதானிக்கப்பட்டது. | | | மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மதிப்பீட்டு விலையினை மிகைக்காத வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (கு) | கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொபய்கன பிரதேச செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்களில் பொருத்துக் கற்கள் பிடித்து புனரமைப்புச் செய்யப்பட்டிருந்த 11 செயற் திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன. | | | |
| (i) | நிவ்டன் 25 பொருத்துக் கற்களின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 04 செயற்திட்டங்களுக்காக நிவ்டன் 40 பொருத்துக் கற்களின் மூலம் நிர்மாணிக்கப்படுகின்ற விலை விகிதங்கள் ஈடுபடுத்தப்பட்டு | - மேற்படி - | (i) | வீதிகளை நிர்மாணிக்கும் போது மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் ஆண்டிற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைகளுடன் வழங்கப்பட்ட ஆவணம் (HSR) |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 308,624 மிகைக் கொடுப்பனவு இடம்பெற்றிருந்தது. | | பயன்படுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்படுவதுடன் அதில் பொருத்துக் கற்களை பரப்புவதற்காக விடய இலக்கம் RSI – 017 என்ற வேலை விடயத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இந்த வேலை விடயங்களின் விபரத்தில் பயன்படுத்தப்படுகின்ற பொருத்துக் கற்களின் அளவு குறிப்பிடப்படவில்லை. எனினும் கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர் உரிய விலைப் பகுப்பாய்வு அறிக்கை உரிய நிறுவனத்திடம் பெற்றுக் கொள்ளப்பட்டு கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட விலைகளின் பிரகாரம் மதிப்பீட்டினைத் தயாரித்தல் தற்பொழுது இடம்பெறுகின்றது. |
| (ii) | அமுனுகொலே வெலியாகார குளத்திற்கு அருகாமையிலுள்ள துன்டஸ்சல சந்தியில் பொருத்துதல் பிடித்து நிறுத்தப்பட்டுள்ள இடத்திலிருந்து முன்பாகச் செல்லும் வீதிச் செயற்திட்டம் தொடர்பாக 11 பொருத்துக் கற்கள் எழுமாந்தமாக பரீட்சிக்கப்பட்டதுடன் அவற்றில் 03 பொருத்துக் கற்கள் இருக்க வேண்டிய ஆகக்குறைந்த நிவ்டன் அளவு இருக்கவில்லை. அது பரீட்சித்த பொருத்துக் கற்களின் அளவில் 27 சதவீத அளவாகும். அதற்கிணங்க பரீட்சிப்புக்களின் வெற்றியளித்தல் ஏற்றுக் கொள்ளப்பட்ட மட்டத்தில் | பரீட்சித்தல் வெற்றியளிக்காத செயற் திட்டத்திற்காக கொடுப்பனவு செய்தல் தொடர்பாக பொறுப்புக் கூறக் கூடிய தரப்பினர்கள் மீது முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவ்வாறே கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து அறவிட வேண்டிய மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ள பணத்தின் அளவினை மிகவும் விரைவாக எங்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உடன்படிக்கை செய்த சங்கங்களுக்கு தற்பொழுது கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பரீட்சித்த 11 பொருத்துக் கற்களின் 03 பொருத்துக் கற்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவினை விட குறைந்த அழுத்தத்தினை சுட்டிக் காட்டியதுடன் அவற்றில் ஒரு பொருத்துக்கல் ஏற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாத இச்செயற்றிட்டத்திற்காக ரூபா 445,000 செலுத்தப்பட்டிருந்தது. | | கொள்ளப்பட்ட அளவினை தசம் ஒன்று அளவு மாத்திரம் குறைவாக இருந்தமையும் தொலைபேசியின் மூலம் ஆய்வுகூடத்தில் விசாரித்த போது மேற்கூறிய 24.9 (N/mm$^2$) பொருத்துக் கல்லானது ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவில் காணப்படுகின்றது என்ற தீர்வின் அடிப்படையில் அந்த பொருத்துக்கல்லையும் உள்ளடக்கி ஒட்டுமொத்த பரிசோதனையின் பெறுபேறு 80 சதவீதத்திற்கு மேல் வெற்றியளிக்கும் சதவீதத்தினைக் காட்டுவதனால் இந்த அறிக்கையானது ஒப்பீட்டு ரீதியாக பொருத்துக்களின் எழுமாந்தமான பரிசோதனை வெற்றியளித்ததாக நடவடிக்கை எடுக்கலாம் என ஆலோசனை கிடைத்துள்ளது. |
| (கூ) | 08 பிரதேச செயலகங்களின் குளங்களை ஆழமாக்குவது தொடர்பாக அகற்றப்பட்ட மண்ணை ஏலத்தில் விற்கும் போது ஏலத்தில் விற்ககூடிய மண்ணின் அளவினை விட குறைவாக ஏலமிட்டதனால் 31 குளங்களிலிருந்து ரூபா 3,160,338 தொகையான நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. | இலகு மண்ணின் அளவை சரியாகக் கணித்தல் வேண்டும். | கொடவெஹர, நிக்கவெரட்டிய பிரதேச செயலகங்கள் பதிலாக குவிக்கப்பட்ட மண் நீண்டகாலமாக காணப்பட்டமையும் அக்காலத்தில் அதிக மழைக்கு உட்பட்டமை, அனைத்து மண் குவியலும் மழையினால் அடித்துச் செல்லலுக்கு உட்பட்டமை முதலியன காரணமாகக் காட்டப்பட்டிருந்தது. வாரியபொல பிரதேச செயலகமானது குளத்து மண்ணின் பெறுமதிக்குரிய விலைப்பட்டியல்களில் கழித்திருந்ததுடன் இன்று வரை இக்குளத்திற்காக இறுதிக் கொடுப்பனவு செய்யப்படவில்லை என காட்டப்பட்டுள்ளது. கிரிபாவ பிரதேச செயலகம் பதிலாக |

| | | | |
|---|---|---|---|
| | | | மண் சம்பந்தப்பட்ட விசேட அறிவு அவர்களிடம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. பண்டுவஸ்நுவர (கிழக்கு) எஹெடுவெவ குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகங்களிலிருந்து பதில் கிடைத்திருக்கவில்லை. |
| (கூ) | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது வெட் வரியற்ற விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 59 குளங்களில் மொத்தமாக 87,582 கனமீற்றர் மண்ணை வெட்டி ஏற்றி எடுத்துச் சென்று குவிக்கும் செயற்பாட்டிற்காக ISR 60.16 இல் குறிப்பிட்ட கனமீற்றருக்கு ரூபா 392 விலை விகிதத்திற்குப் பதிலாக வெட் வரியுடன் ரூபா 450 விலை விகிதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒரு கனமீற்றருக்கு ரூபா 58 வீதம் ரூபா 5,079,756 மொத்த தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு மிகையாகச் செலுத்துதல் இடம்பெற்றதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. | இயந்திரத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது வெட் விலையினை அடிப்படையாகக் கொள்ளாதிருத்தல் மற்றும் மாகாண சபை விலைக் குழு தீர்மானித்திருந்த னாலும் ஒப்பந்தக் காரர்களின் வெட் இற்காக பதிவு செய்தலை உறுதிப்படுத்தியிருக் காததனால் உரிய பணத்தைப் பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவிடல் வேண்டும். | பண்டுவஸ்நுவர (மேற்கு), குளியாப்பிட்டிய (மேற்கு), ரஸ்நாயக்கபுர, பிங்கிரிய, குளியாபிட்டிய (கிழக்கு), இப்பாகமுவ, வீரம்புகெதர, உடுபத்தாவ விவசாய அமைப்பு முதலிய சமூக அமைப்புக்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு வெட் வரியுடனான விலை விகிதங்களை பயன்படுத்துவதற்காக வடமேல் மாகாண சபை விலைக் குழுவின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை அடிப்படையாகக் கொண்டு வெட் வரியுடனான விலை விகிதத்தை பயன்படுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வடமேல் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் விசாரிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அவர்களினால் கணித்து வழங்கப்படுகின்ற விலை விகிதங்களின் பிரகாரம் ஏதாவது பணத்தை அறவீடு செய்ய வேண்டியிருந்தால் அறவீடு செய்து அறிக்கையிடுமாறு தெரியப்படுத்தியுள்ளேன்.<br><br>கொபேய்கன்<br>----------------------<br>இது சம்பந்தமாக உரிய ஒப்பந்தக்கார அமைப்பிற்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒரு சங்கம் மாத்திரம் பிடித்து வைத்தல் பணத்திலிருந்து அறவிடுமாறும் மிகுதி இருக்குமாகயிருந்தால் செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. |
| (கெ) | அகற்றுவதற்கு போதியளவு சேற்று மண் படிவு காணப்படாத வாரியபொல பிரதேச செயலகப் பிரிவில் மெதகம தங்கஹமுல குளத்திலிருந்து சேற்று மண்ணை அகற்றும் சாடையில் மணல் கல் என்பவற்றுடனான 6000 கனமீற்றருக்கு மேற்பட்ட அளவான மண் அகற்றப்பட்டுள்ளன என தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அளவீட்டு அறிக்கை மற்றும் குறிப்புக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அகற்றப்பட்ட மண் 500 மீற்றர் அளவான தூரத்தில் குவித்து மண் இருப்பு முழுவதும் அகற்றப்பட்டிருந்தது. மாவட்டத்தில் மணல் 01 கியூப் ரூபா 1000 இற்கு மேற்பட்ட விலைக்கு ஏலமிட்டதற்கு இணங்க $\frac{6000x125x1000}{288x100}$ ஆக ரூபா 2,650,176 பெறுமதியான மண் இருப்பு விவசாய அமைப்புக்களால் அகற்றப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | குளம் சம்பந்தப்பட்ட வேலைகளின் போது குளத்திலிருந்து மண், மணல் என்பன அகற்றுதல் சிறப்பாக மேற்பார்வை செய்யப்பட வேண்டுமெனவும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 யூன் 07 ஆந் திகதிய 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் சிபார்சு செய்யப்படுகின்றது. | மெதகம தங்கஹமுல குளத்திலிருந்து மதிப்பீட்டின் பிரகாரம் அகற்றப்பட்ட 6,000 கனமீற்றர் அளவான மண் குளத்திலிருந்து அகற்றப்பட்டதன் காரணமாக அம்மண்ணின் அளவு 01 கியூபிற்கு ரூபா 400.00 பெறுமதி தொடர்பாக ரூபா 848,000 பணம் உரிய விலைப்பட்டியலில் கழிக்கப்பட்டது. |
| (கே) | கம்பெரலிய 2019 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அம்பன்பொல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 5 குளங்களின் அணைக்கட்டிற்குத் தேவையான மண் குளத்திலிருந்து வெட்டி | நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு | எங்களால் கணித்துச் சமர்ப்பிக்கப்பட்டு மிகையாகச் செலுத்திய ரூபா 635,031 பணத்தில் தற்பொழுது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள 03 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 235,131 மொத்த |

| | | | |
|---|---|---|---|
| | குளத்தின் அணைக்கட்டிற்கு எடுத்துச் சென்று குளத்து அணைக்கட்டை தயார்ப்படுத்துவதற்காக ஒரு கனமீற்றருக்கான செலவு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட விலை விகிதத்தின் பிரகாரம் ரூபா 486 ஆக இருந்த போதிலும், ரூபா 1,241 ஆக எடுத்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக ரூபா 2,033,950 மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | செய்யப்பட வேண்டியதுடன் மிகைக் கொடுப்பனவை மீண்டும் அறவிடுதல் வேண்டும். | தொகை நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து அறவிடப்பட்டது எனத் தெரிவிக்கின்றேன். எனினும், தற்பொழுது கட்டுநிதி இல்லாததன் காரணமாக கொடுப்பனவு செய்யப்படாத 02 செயற்திட்டங்களின் மிகைக் கொடுப்பனவிற்குரிய ரூபா 399,899 பணத்தை செலுத்தியதன் பின்னர் அறவிட்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படுமெனத் தெரிவிக்கின்றேன். |
| (கை) | கல்கமுவ பிரதேச செயலகத்திற்குரிய சியம்பலாகஸ்வெவ குளத்தை புனரமைப்புச் செய்யும் போது குளத்து அணைக்கட்டிற்கு 601 கனமீற்றர் மண்ணை வெளியிலிருந்து கொண்டுவந்து போடுவதற்காக ரூபா 580 வீதம் ரூபா 348,580 தொகை செலுத்தப்பட்டிருந்தும் குளத்து அணைக்கட்டிற்கு போடப்பட்ட மண் குளத்திற்குள்ளேயிருந்து வெட்டப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். | இச்செயற்திட்டத்திற்காக மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது மண் வெட்டி அணைக்கட்டின் மீது போட்டு தயார்ப்படுத்துவதற்கான விலையானது மாகாண நீர்ப்பாசன விலைகளின் பிரகாரம் ஆய்வு செய்ததன் பின்னர் அதுவரை காணப்பட்ட நிலைமையின் பிரகாரம் ரூபா 580.00 விலை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வேலை விடயங்களை கணக்காய்வு செய்ததன் பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பேரில் இதன் விலைப் பகுப்பாய்வு மாவட்ட செயலகத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அதில் விலைகளில் வித்தியாசம் காணப்பட்டது என தெரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அதன் காரணமாக இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து குளத்து |

| | | | |
|---|---|---|---|
| | | | வேலைகளுக்குமான விலைப் பகுப்பாய்வினைப் பயன்படுத்தி பொருத்தமான விலை விகிதங்களைப் பயன்படுத்தி மதிப்பீட்டினைத் தயாரிப்பதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (கொ) | வீதியில் பரப்புவதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள கிரவல்களைக் குவித்து அளவை செய்ய வேண்டிய போதிலும், அம்பன்பொல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 13 செயற்திட்டங்களின் மொத்தமாக 1277 குவியல்களின் மாதிரியாக ஒவ்வொரு செயற்திட்டத்திலிருந்தும் 2 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையான 108 குவியல்களை அளவீடு செய்து 4,710.33 கனமீற்றர் வழங்கப்பட்டது எனக் கணித்து கனமீற்றருக்கு ரூபா 208 வீதம் குவித்தல் செலவாக ரூபா 979,748 செலுத்தப்பட்டிருந்தது. இந்த கிரவல்களின் கொள்ளளவு 03 கியூப் மற்றும் 01 கியூப் டிப்பர் வாகனத்தின் மூலம் எடுத்துச் சென்று தேவைப்பாட்டின் பிரகாரம் வீதியில் போடப்பட்டிருந்தும் மீண்டும் குவிக்கப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் இல்லாததனால் மேற்கூறிய பணம் செய்யப்பட வேண்டியதல்லாததனால் செலவாக அவதானிக்கப்பட்டது. | சரியாக அளவீடு செய்யப்பட வேண்டியதுடன் அறவீடு செய்தல் தொடர்பான செலவு விபரம் அறிக்கை யிடப்படுதல் வேண்டும். | குவித்தல் சம்பந்தமாக 10 செயற்திட்டங்களிலிருந்து அறவீடு செய்தல் ரூபா 531,206 ஆகும். அதற்கிணங்க 10 ஆண்டுகளுக்குரிய அறவீடுகள் பிடித்து வைத்தல் பணத்திலிருந்து அறவிட்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அறவிடப்படாத மூன்று செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 159,695 பணத்தை அறவிட்டு பின்னர் கணக்காய்விற்கு அறிக்கை சமர்ப்பிப்பேன். |
| (கோ) | நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதங்களைப் பயன்படுத்தாது | மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது சரியான விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட | நீர்ப்பாசன அலுவலகம் சமர்ப்பித்த கொடுப்பனவு அறிக்கைகளின் பிரகாரம் குளத்திலிருந்து சேற்று மண்ணை அகற்றி குளத்தை |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்படாததன் காரணமாக மாஸ்பொத பிரதேச செயலகத்திற்குரிய அளுத்வெவ குளத்தை புனரமைப்புச் செய்யும் போது ரூபா 517,500 மிகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | வேண்டியதுடன் நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் சரியான பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். | ஆழமாக்குவதற்காக ஒரு கனமீற்றருக்கு ரூபா 450 வீதம் 2216 கனமீற்றருக்கு ரூபா 997,200 பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது. அப்பணம் இன்றுவரை செலுத்தப்படாததுடன் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட ரூபா 450 விலையினை உள்ளடக்கிய VAT பெறுமதியான ஒரு கனமீற்றருக்கு ரூபா 58 வீதம் 2216 அலகுக்கு ரூபா 128,528 பணமும் முதலாம் பகுதி கொடுப்பனவு வவுச்சருக்குரிய ரூபா 14,370 பணமும் என்ற வகையில் ரூபா 142,898 பணம் கொடுப்பனவு வவுச்சரிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (கௌ) | எஹடுவெல பிரதேச செயலகப் பிரிவில் எதினிமலே பஹலகம குளத்தின் அணைக்கட்டிற்கு 499.8 கனமீற்றர் மண்ணை எடுத்துச் சென்று வழங்கியமை சான்றுபடுத்தப்பட்டிருந்தும் போடப்பட்ட மண்ணின் அளவு ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் கணிக்கப்பட்டிருக்கவில்லை. அணைக்கட்டின் குறுக்கான பதிவுகள் அணைக்கட்டின் அகலம் என்பவற்றை அடையாளம் கண்டு கொள்ள முடியாததன் காரணமாக போடப்பட்ட மண்ணின் அளவை முறையாக ஏற்றுக் கொள்ளக்கூடிய முறைமையில் கணிப்பீடு செய்யப்படாமையால் மதிப்பீடு செய்யப்பட்ட 428.40 கனமீற்றரினை மிகைத்து 71.40 கன மீற்றர் போடப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு | குளத்தின் அணைக்கட்டிற்கு போடப்பட்ட மண்ணின் அளவுக்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். மேலும் பிழையாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரிப்பதன் மூலம் இடம்பெற்றுள்ள முழுமையான நட்டத்தையும் பொறுப்புக்கூறக் கூடிய நபரிடமிருந்து மீள அறவீடு செய்தல் வேண்டும். | தொடக்க மதிப்பீட்டின் பிரகாரம் குளத்தின் அணைக்கட்டிற்கு போடப்பட வேண்டிய மண்ணின் அளவு $428.40m^3$ ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வேலைகளை நிறைவேற்றும் போது மட்டப்படுத்தல் உபகரணத்தின் உதவியுடன் அளவீடு செய்யும் போது 71.40 கனமீற்றர் மிகையாக மண் அணைக்கட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டது என இறுதிக் கணக்குகள் எடுக்கும் போது வெளிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க ஒப்பீட்டு ரீதியான மதிப்பீட்டின் மூலம் அந்நிலைமை திருத்தப்பட்டு அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டது. அதற்கிணங்க மிகைக் கொடுப்பனவு இடம்பெற்றிருக்கவில்லை. |

போதியளவு சான்றுகள் காணப்படவில்லை. மேலும் மதிப்பீடு செய்யப்பட்ட அளவில் 2/3 ஆனது டோசர் இயந்திரத்தினால் தள்ளியும் 1/3 ஆனது எடுத்துச் செல்லப்பட்டும் மேற்கொள்ளப்பட்டது என அவதானிக்கப்பட்டதனால் செலுத்த வேண்டிய பணம் ரூபா 149,083 தொகை மற்றும் செலுத்திய பணம் ரூபா 289,884 ஆக இருந்ததனால் ரூபா 140,801 மிகையாகச் செலுத்தப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

## 3.4 எதிர்பார்த்த பெறுபேறுகள்பெற்றுக் கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சனாதிபதி செயலகத்தின் மூலம் கிராம சக்தி மக்கள் தொழில் முயற்சியை அமுல்படுத்துவதற்காக 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 35,568,218 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இத் தொழில்முயற்சியின் குறிக்கோளானது 2020 ஆம் ஆண்டளவில் சமூக மேம்பாட்டு மற்றும் உற்பத்திச் சேவைகளை முன்னிலைப்படுத்தி 5000 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உருவாக்குவதனூடாக அந்த கிராம சக்தியினுள் குடியிருக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாகும். அதற்காக மக்களின் மாதாந்த வருமானத்தை இரட்டிப்பாக்குதல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும், அது நிறைவேறியிருக்க வில்லை. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 360 கிராம சக்தி சங்கங்களுக்கு வழங்கப்பட்ட பணத்தில் வங்கி கணக்குகளில் 2019 திசெம்பர் 30 | அரசாங்கத்தின் பணம் முடியுமான அளவிற்கு உரிய நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் செலவு செய்யப்படுதல் வேண்டும். | 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையின் எதிர்பாராத வறுமையை ஒழித்து ஏழ்மை மற்றும் கட்டுப்பட்ட அந்த சமூக பொருளாதார சிக்கல்களுக்கு நிரந்தர தீர்வுகளை வழங்கும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது. முதலாம் மட்டத்தின் கீழ் 90 வரையறுத்த கிராம சக்தி மக்கள் சங்கங்களை உருவாக்கி அச்சங்கங்களை பதிவு செய்வதற்காக கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பதிவு செய்த சங்கங்களுக்காக கிராத சக்தி நிதியத்தின் முதலாம் தவணைப் பணமும் இரண்டாம் தவணைப் பணமும் வழங்கப்பட்டுள்ளது. |

ஆந் திகதி வரை ரூபா 169,669,778 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

2019-12-31 ஆந் திகதி வரை 90 சங்கங்களுக்கு ரூபா 178,400,000.00 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இச்சங்கத்தின் நிதியில் வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதியை பயன்படுத்தி சுழற்சிக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தைப் பேணுவதற்கு ஆலோசனை கிடைத்துள்ளதுடன் அதற்காக கணக்கு வைத்தல் முறைமையும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தை பயன்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப் பட்டிருந்ததுடன் கிராமிய மக்களின் தேவைப்பாட்டின் பிரகாரம் இயலளவு அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்படுகின்றன. அவ்வாறே கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 221 சங்கங்களுக்கு ஒரு சங்கத்திற்கு ரூபா 400,000.00 வீதம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கான செயற்பாடுகளும் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.

இந்நிகழ்ச்சித் திட்டம் கிராம மக்களுடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டு அவர்களின் வாழ்க்கை

| | | |
|---|---|---|
| | | நிலைமையினை படிப்படியாக மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்தும் போது ஏதும் பின்னடைவுகள் ஏற்பட்டிருந்த போதிலும், தற்பொழுது ரூபா 42,810,285 பணம் செலவுத் திட்டத்திற்கு கடனாக வழங்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித் திட்டம் 2153/12 ஆம் இலக்க 2019-12-10 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் சமூக மேம்பாட்டு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பிற்கு உட்பட்டுள்ளது. அந்த அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் இதுவரை எனக்கு கிடைத்திருக்கவில்லை எனத் தெரிவிக்கின்றேன். எவ்வாறாயினும், தற்பொழுது சங்கங்களுக்கு செலவு வைக்கப்பட்டள்ள பணத்தை பயன்படுத்தி உரிய நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன என்று மேலும் தெரிவிக்கின்றேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் | அரசாங்கத்தின் நிதியை சிக்கனமாகவும் | மேற்கூறிய செயற்திட்டம் இதுவரை இந்த அலுவலகத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்படுத்தப்பட்டுள்ள E-NIC செயற்திட்டத்தின் கீழ் 10 பிரதேச செயலகங்களில் ரூபா 2,592,590 பெறுமதியான பொருட்கள் பண்டங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களும் அச்செயற்திட்டத்திற்காக இணைத்துக் கொள்ளப்பட்ட 56 உத்தியோகத்தர்களும் விளைவற்றுக் காணப்பட்டன. | விளைதிறனாகவும் உரிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் செலவு செய்தல் வேண்டும். | ஆரம்பிக்கப்பட்டிருக் காததுடன் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை என ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கா ததனால் அதற்காக வழங்கப்பட்டுள்ள பொருட்கள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு மத்தியில் QR ஸ்டிக்கர் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதன் காரணமாக இன்று வரை அவை விளைவற்ற சொத்துக்களாக உறுதியாக இனங்காண முடியாதுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இச்செயற்திட்டத்திற்காக பிரதேச செயலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள இரண்டு உத்தியோகத்தர்கள் அப்பிரிவில் அடையாள அட்டைகள் சம்பந்தமான அனைத்து கடமைகளையும் மேற்கொள்வதுடன் குறைந்த பயன்பாட்டிற்கு உட்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | 21 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்குரிய அரசாங்கத்தின் 157 கட்டிடங்களும் அரசாங்கத்தின் 245 ஏக்கர் காணிகளும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | அரசாங்கத்தின் சொத்துக்கள் உச்ச அளவு விளைதிறனாக பயன்படுத்தப்படுதல் வேண்டும். | பிரதேச செயலகங்களிலுள்ள விளைவற்ற சொத்துக்கள் தொடர்பான விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரஸ்னாயகபுர கல்கமுவ, நிகவெரடிய, கொடவெஹர, பிரதேச செயலகங்களில் பொருத்துக்கல் பரப்பி வீதியை தயாரிக்கும் போது ஒவ்வொரு வீதியின் தன்மை, பயணம் செய்யும் வாகனத்தின் வகை மற்றும் அளவு ஆகிய விடயங்களின் பிரகாரம் ஈடுபடுத்தக்கூடிய பொருத்துக்கல்லின் வகை, நிவ்டன் அளவு என்பவற்றின் பிரகாரம் தீர்மானிக்கப்படாது நிவ்டன் 40 பொருத்துக்கல் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. | வீதியின் தன்மை மற்றும் வாகனத்தின் அளவும் வகையும் என்பவற்றின் பிரகாரம் பொருத்துக்கல்லின் நிவ்டன் அளவு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். | 2019 கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொருத்துக்கல் பிடித்து வீதியினைத் தயாரிக்கும் போது பயணிக்கும் வாகனத்தின் வகையும் அளவும் ஆகிய விடயங்களின் பிரகாரம் அந்த வீதியின் நீண்டகாலம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் ஆகிய விடயங்களை குறிக்கோளாகக் கொண்டு நிவ்டன் 40 பொருத்துக்கல்லை ஈடுபடுத்தி வீதியினை தயார்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | குளத்தை புனரமைப்புச் செய்யும் போது வயல் காணி ஒரு ஏக்கருக்கு செலவு செய்யக்கூடிய அளவு ரூபா 25,000 என கமநல சேவை திணைக்களம் ஏற்றுக் கொண்டிருந்தும் நிகவெரடிய பிரதேச செயலகப் பிரிவிற்குரிய மல்லிவெவ மற்றும் இஹல பச்சவெவ குளங்களைப் புனரமைப்பதற்காக ஒரு ஏக்கருக்கு முறையே ரூபா 142,857 மற்றும் ரூபா 200,000 செலவு செய்யப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குளங்களைப் புனரமைப்புச் செய்யும் போது கமநல சேவை பிரதேச உத்தியோகத்தரின் சிபாரிசின் அடிப்படையில் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், குளத்தின் கீழ் காணப்படுகின்ற வயல் காணியின் ஏக்கர் அளவிற்கு வீதாசாரமாக செலவு செய்யப்பட வேண்டிய பணத்தின் எல்லை தொடர்பாக கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் சிறு |

| | | | |
|---|---|---|---|
| | | | நீர்ப்பாசன செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது அவ்விடயங்கள் தொடர்பாக விசேட அறிவினைப் பெற்றுக் கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/1 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணிக்கப்படுகின்ற அனைத்து வீதிகளும் தேசிய வீதி முறைமையுடன் இணைக்கப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய கொள்கைச் செயற்பாடு மீள்குடியேற்றம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் நாரம்மல பிரதேச செயலகத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட ரூபா 1,200,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 02 வீதிச் செயற்திட்டங்களுக்குரிய நிர்மாணங்களை தேசிய வீதி முறைமையுடன் இணைக்காத வகையில் இடத்துக்கிடம் பகுதி பகுதியாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | இவ்வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது முழுமையாக வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக போதியளவு நிதி ஏற்பாடு கிடைக்காமையால் வீதிகளின் அத்தியாவசியமான இடங்களை மாத்திரம் அபிவிருத்தி செய்வதற்காக அங்கீகரித்த பணம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக இதுவரை நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்காததனால் வீதி முன்பிருந்த நிலையில் காணப்படுவதுடன் மீண்டும் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்ததன் பின்னர் தேசிய வீதி முறைமையுடன் இணைக்கும் வகையில் இவ்வீதியினை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான உரிய தரப்பினர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.1 நிதி ஒழுங்கீனத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 1/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 04 பிரதேச செயலகங்களால் பதிவு செய்த 60 சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு நேரடி முறைமையின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 93,827,150 மொத்த விலையான 72 ஒப்பந்தங்கள் அச்சுற்றறிக்கைக்கு முரணாக செய்த வேலைப் பெறுமதிக்காக கிடைத்த பணத்தில் 5 சதவீதத்தை தங்களது அமைப்பிற்கு பெற்றுக் கொள்ளும் குறிக்கோளில் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | உப ஒப்பந்தம் வழங்கிய விவசாய அமைப்புக்களை கறுப்பு பட்டியலில் சேர்த்தல் வேண்டும். | கமநல சேவை பிராந்திய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தியதன் பின்னர் அதற்கான பதிலாக காட்டப்பட்டதானது அந்த அமைப்புக்களின் மேற்பார்வை நடவடிக்கைகைய மிகவும் ஒழுங்குமுறையாக எதிர்காலத்தில் பேணப்படும் என்பதாகும். எவ்வாறாயினும், இக்கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை கவனத்திற்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ அமைப்புக்களின் மூலம் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய ஒப்பந்தங்களை நிறைவேற்றும் போது உடன்படிக்கையின் பிரகாரம் உப ஒப்பந்தக்காரர்களை தொடர்பு படுத்திக் கொள்ளாது செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு தெளிவாக ஆலோசனை வழங்கப்பட்டது எனவும் பிரிவிற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தரும் அது சம்பந்தமாக தெரியப்படுத்தியுள்ளார் எனவும் தயவாகக் குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | 2019 கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மெதகெதர பிரிவில் ரூபா | பிழையான அளவீட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்த தரப்பினர்கள் | செயற்திட்டத்தினை மேற்கொள்ளும் போது மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விட்டத்துடன் குழாய்க்குப் பதிாக வெளி விட்டம் |

| | | | |
|---|---|---|---|
| | 2,000,000 நிதி ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் பாதுகாப்பு வேலியினை நிர்மாணிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட உள்ளக விட்டம் 50 மி.மீற்றர் கல்வனயிஸ் குழாய்கள் குறுக்காகவும் 40 மி.மீற்றர் கல்வனயிஸ் குழாய்கள் நீட்டாகவும் பொருத்துவதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. பொருத்தப்பட்ட குழாய்களின் விட்டம் 2019, BSR விலை விகிதத்தின் பிரகாரம் 50 மி.மீற்றர் குழாயில் இருக்க வேண்டிய விட்டத்தினை விட 8.7 மி.மீற்றரினால் குறைவடைந்திருந்ததுடன் குறுக்காகப் பொருத்தப்பட்ட 40 மி.மீற்றர் கல்வனைஸ் குழாய்களின் வெளிப்பக்க விட்டமானது 5.7 மில்லி மீற்றரினால் குறைவடைந்திருந்தன் காரணமாக உறுதிப்பாடு மிகவும் பலவீனமானதாகும். மேலும் இக்குழாய்களில் துரப்பிடித்தலை தடுப்பதற்கான பூச்சு பூசப்பட்டிருந்தது என்பது உறுதிப்படுத்தப்படாததுடன் தூண் பொருத்தப்பட்ட 09 அடித்தள நிலையங்களின் அனைத்து பக்கங்களிலும் வெடிப்புக் காணப்பட்டிருந்தது. | சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திருத்தம் செய்தலும் சரியாக மேற்கொள்ளப் படாமையால் மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை மீண்டும் கணித்து மீள அறவிடுதல் வேண்டும். | 48.5mm மற்றும் 42.5mm உடனான கல்வனைஸ் குழாய்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட குழாய்களுக்குரிய BSR விலை விகிதத்தை ஈடுபடுத்தி கொடுப்பனவு அறிக்கை திருத்தப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது. அத்திவாரத்தின் உயரம் 2 ½ அடி மற்றும் அகலம் 2 ½ அடியினுடையது என்பதனால் உறுதிப்பாடு சம்பந்தமாக சிக்கலான நிலை உருவாகி யிருக்கவில்லை என தயவாக தெரிவிக்கின்றேன். மேலும், இக்குழாய்களில் துருப்பிடித்தலை தடுக்கின்ற வர்ணம் பூசப்பட்டுள்ளது. அத்திவாரத்தின் சில இடங்களில் நிலத்தில் காணப்பட்ட இயற்கையான குழிகளின் மூலம் காற்று வெடிப்பாக குழிகள் ஏற்பட்டிருந்தும் 2020-08-18 ஆந் திகதி மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனை சந்தர்ப்பம் வரை இக்குழிகளில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப் பட்டது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (இ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்கமுவ பிரதேச செயலகத்தினால் ரூபா 1,455,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்பட்ட மயிலவெடிய குளத்திற்காக கொடுப்பனவு செய்யும் | - மேற்படி - | இந்த வேலை விடயத்தின் 1.1 ஆம் இலக்கத்தின் பிரகாரம் வான்கதவில் குழாய்களை அமைப்பதற்காக மனித வேலைகளை ஈடுபடுத்துவதற்குப் பதிலாக இயந்திரங்கள் ஈடுபடுத்தியமையின் |

போது வேலை விடயங்கள் இலக்கம் 1.1, 4.4 மற்றும் 4.5 இற்காக பெகோ இயந்திரம் மற்றும் டோசர் ஈடுபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தும் கொடுப்பனவு செய்யும் போது மனித வேலைகளை ஈடுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற விலை விகிதங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக வான் கதவுகளுக்கு போடுவதற்காக இடைவெளி வெட்டுதல், விளிம்பு வெட்டுதல் மற்றும் அணைக்கட்டிற்கு மண் போட்டு தயார்ப்படுத்துதல் என்பவற்றிற்காக ரூபா 572,172 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

காரணமாக மிகையாகச் செலுத்தப்பட்டுள்ள ரூபா 21,837.00 பணம் மற்றும் வேலை விடயம் 4.4 இன் கீழ் குளத்து அணைக்கட்டின் அகலத்தை அதிகரிப்பதற்காக (பென்சின்) வெட்டுதலானது மனித வேலையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது என தயவாகத் தெரிவிக்கின்றேன். அதில் குறிப்பிட்ட விலை விகிதமானது மாவட்ட பொறியியலாளர் அங்கீகரித்த மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் விலைகளின் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்டது. வேலை விடயம் 4.5 இன் பிரகாரம் வெளியிலிருந்து மண் கொண்டு வரப்பட்டு அணைக்கட்டு தயார்ப்படுத்துவதற்குப் பதிலாக குளத்தை ஆழமாக்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மண் ஈடுபடுத்தப்பட்டு குளத்தின் அணைக்கட்டு தயார்ப்படுத்தப்பட்டது என கணக்காய்வின் மூலம் தெரியப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு இணங்க மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 441,750 பணத்தையும் அரசாங்கத்திற்கு மீளச் செலுத்துமாறு விவசாய அமைப்பின் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

(ஈ) அலவ்வ பிரதேச செயலகப் பிரிவின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள ஓதர திருவம்பொல பிரிவில் கிரவல் தோண்டிய 17 இடங்கள் சம்பந்தமாக மேற்கொண்ட பௌதீக கணக்காய்வுப்

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் வழங்கப்பட்ட தோண்டுதல் அனுமதிப்பத்திர நிபந்தனைகளின் பிரகாரம் தோண்டிய நிலத்தின் மேற்பரப்பிலுள்ள மண் தட்டை தோண்டிய மண்ணைக் குவித்து களஞ்சியப்படுத்த வேண்டியதுடன் தோண்டியதன் பின்னர் அம்மண்ணை புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த வேண்டிய போதிலும், கிரவல் மேற்பரப்பு மண் தட்டினை அகற்றி தோண்டுதல் முதல் மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதிப்புக்களை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மற்றும் அதற்குப் பொறுப்பான நிறுவனங்களுக்கு தெரியப் படுத்துவதற்கு தொடர்ச்சியாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓதர கிருவப்பொல பிரிவில் கிரவல் வெட்டும் 17 இடங்கள் சம்பந்தமான கணக்காய்வு பரிசோதனையின் போது சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனியப் பொருட்கள் அதிகாரச்சட்டத்தின் மூலம் கனியப் பொருட்களுக்காக ஆய்வு செய்தல், சுரங்கம் தோண்டுதல், அவற்றை எடுத்துச் செல்லல், தயார்ப்படுத்தல், வியாபாரம் செய்தல், அல்லது இறக்குமதி செய்யும் பொருட்டு அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்திடம் உள்ளதனால் இப்பிரிவில் அனுமதியற்ற தோண்டுதல் இடம்பெற்றுள்ள இடங்கள் சம்பந்தமாக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் பணிப்பாளருக்கும் பொலிஸ் நிலைய பொறுப்பாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. ஓதர கிருவப்பொல பிரிவில் கிரவல் தோண்டுகின்ற 17 இடங்கள் தொடர்பாக 03 நபர்கள் காணிகளில் அனுமதியின்றி கிரவல் தோண்டுவது தொடர்பாக அவர்களின் பெயர்கள், இடங்களுடன் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. ஏனைய நபர்கள், காணிகளில் கிரவல் தோண்டுதல் தொடர்பாக அவர்களின் பெயர் ரீதியாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தெரியப்படுத்தப் படாதிருந்தும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அனுமதியற்ற கிரவல் தோண்டுதல் தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. |
| (ii) | தோண்டும் நிலத்தில் ஒன்று சேர்கின்ற நீரை அகற்றுவதற்காக பொருத்தமான நீர் வடிகாலமைப்பு முறைமையைத் தயார்படுத்தி வெட்டிய கால்வாயை இலக்கம் 45 ஆக பேண வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | (ii) | தோண்டுதல் அனுமதிப்பத்திர நிபந்தனையை மீறுதல் சம்பந்தமாக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கை செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறான நிபந்தனைகளை மீறுதல் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்திடம் உள்ளது. |
| (iii) | இக்காணிகள் அனைத்தும் அரசாங்கத்தினால் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கிய அரசாங்கத்தின் காணிகள் என்பதனால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தின் இரண்டாவது பட்டோலையின் 1 ஆவது நிபந்தனையின் கீழ் கனியப் பொருட்களைத் தோண்டுதல் மற்றும் அகற்றுதல் அனுமதிப்பத்திர தாரர்களுக்கு அதிகாரம் இல்லை. எவ்வாறாயினும், இந்த நிபந்தனைகளை மீறி மண் அகற்றப்பட்டிருந்தது. | - மேற்படி - | (iii) | கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அனுமதியின்றி இடம்பெற்றுள்ள தோண்டுதல்கள் ஆனதுடன் அனுமதியற்ற தோண்டுதல்கள் சம்பந்தமாக உரிய நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள் ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | இந்த கிரவல் தோண்டப்பட்ட 17 இடங்களும் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் பிராந்திய தோண்டுதல் பொறியியலாளரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரதாரர்களின் பட்டியலில் குறிப்பிடப்படாத அனுமதியற்ற கிரவல் தோண்டப்பட்ட இடமாகும். | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | வில்கமுவ வத்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அரசாங்கத்தின் தேவைப்பாட்டிற்காக நியாயமற்ற வகையில் கிரவல் தோண்டுதல் இடம்பெற்ற 04 சந்தர்ப்பங்கள் மண்சரிவு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில் கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பனாகமுவ கிரிந்திகல்ல வீதிக்கு தார் இடும் போது ஒப்பந்தக்காரருக்கு நன்மை பயக்கும் வகையில் தொழில் நுட்ப உத்தியோகத்தரால் அளவீடு செய்யும் போது 59.5 சதுரமீற்றர் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் உதவி திட்டமிடல் பணிப்பாளரினாலும் அது சரியானது என உறுதிப்படுத்தியதன் காரணமாக ரூபா 74,868 மிகையாகச் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது சரியான அளவைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் உரிய தரப்பினர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட அனைத்து குறைபாடுகள் மற்றும் அளவைகளை சரிசெய்து திருத்திய கொடுப்பனவு அறிக்கைகளைத் தயாரித்து கொடுப்பனவு நடவடிக்கைகள் செய்யப்பட்டதுடன் இச்செயற்திட்டம் சம்பந்தமாக எதுவித மிகைக் கொடுப்பனவும் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் இந்த வீதி தற்பொழுது பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான நிலையில் காணப்படுகின்றது. |
| (ஊ) | கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்கமுவ பிரதேச செயலகப் பிரிவிற்குரிய | - மேற்படி - | அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய ரூபா 174,443 பணத்தை செலுத்துமாறு உடன்படிக்கை செய்த |

| | | | |
|---|---|---|---|
| | புல்னேவ எஹடுகலவாய வீதிச் செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது செய்யப்படாத வேலைகளுக்காக ரூபா 174,443 செலுத்தப்பட்டிருந்தது. | | அமைப்பிற்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடன்படிக்கை செய்த அமைப்பினால் செயற்திட்டத்தின் நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து அப்பணத்தை தீர்த்து வைக்குமாறு தெரியப் படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தொகையை நிறுத்தி வைத்தல் பணத்திலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஏ) | 04 பிரதேச செயலகங்களின் கம்பெரலிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 15 வீதிகளுக்குரிய பொருத்துக் கற்களின் அழுத்தத்தை (நிவ்டன் அளவு) பரீட்சித்த போது 10 வீதிகளின் பொருத்துக் கற்களில் காணப்பட வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட அழுததம் காணப்படவில்லை. பொருத்துக் கற்களில் காணப்பட வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட நியமம் இல்லாததன் காரணமாக உரிய வீதிகளின் வெற்றியளித்தல் தொடர்பாக ஆபத்து நிலைமை காணப்படலாம். | பொருத்துக் கற்களின் அழுத்தத்தை ஏற்கனவே பரீட்சித்தல் தொடர்பாக ஐயப்பாடான செயற்பாட்டுத் தன்மை அவதானிக்கப் பட்டதுடன் இது தொடர்பாக முறையான ஒரு குழுவினை நியமித்து விசேட பரிசோதனை மேற்கொள்ளுதல் பொருத்தமானதாகும் | கல்கமுவை பிரதேச செயலகம்<br>---------------------------------------------<br>மீகலெவ எலி வீதியை பொலிசிடிய சந்தியிலிருந்து கால்வாய் வரை பொருத்துக்கல் பரப்பும் போது பொருத்துக் கற்களின் அழுத்தம் நிவ்டன் 25 ஆக கருத்திற் கொண்டு மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 246,513 பணத்தை அரசாங்கத்திற்கு செலுத்துமா்று உடன்படிக்கை செய்த அமைப்பிற்கு தெரியப்படுத்தப்பட்டது. பண்டாரகம நீர்த்தாங்கி வீதியை பொருத்துக்கல் பிடித்து புனரமைப்புச் செய்தலின் இறுதி விலைப்பட்டியலினைத் தயாரிக்கும் போது ரூபா 287,379 கழித்து வவுச்சர்கள் தயாரிக்கப் பட்டது. அலுத்ஹேரத்கம பிரிவிலுள்ள வீதியை பொருத்துக்கல் பரப்பி புனரமைப்புச் செய்யும் செயற்திட்டத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் அந்த வீதிக்கு நிவ்டன் 25 அழுத்தத்திலான பொருத்துக்கல் தயாரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | | வாரியபொல, நிக்காவெரட்டிய, கெடவெஹர பிரதேச செயலகங்கள்<br>--------------------------------------------<br>தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் பொருத்துக்கற்களை பிடிப்பதற்கு முன்னர் உரிய இரண்டு வீதிகளின் தர அறிக்கை பெற்றுக் கொண்டு அவை வெற்றியளித்துள்ளது. அவ்வாறே பொருத்துக் கற்கின் தன்மையை பரீட்சித்த போது அதன் வடிவத்தில், மெருகுபடுத்தலில், நியமத்தலில் சிக்கல்கள் இல்லாததனால் வீதிக்கு பொருத்துக் கற்கள் பிடிக்கும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | கொடவெஹர பிரதேச செயலகப் பிரிவில் பொருத்துக்கல் படித்து அபிவிருத்தி செய்யப்பட்ட 02 வீதிகளின் பொருத்துக் கற்கள் பிடித்து இரு பக்கத்திலும் கொங்கிறீட் தட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட வடிவமைப்பு பலகையின் உயரத்தின் அளவை அதிகரித்து கணிக்கப்பட்டு ரூபா 60,256 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | பொருத்துக் கற்களின் அழுத்தத்தை ஏற்கனவே பரீட்சித்தல் தொடர்பாக சந்தேகமான செயற்பாடு அவதானிக்கப் பட்டதுடன் அது தொடர்பாக முறையான ஒரு குழுவை நியமித்து விசேட பரிசோதனை மேற்கொள்ளல் பொருத்தமானதாகும் | விளிம்பு அணைக்காக வடிவமைப்பினை ஈடுபடுத்தும் போது கொங்கறீட் இடுவதற்கு முன்னர் வடிவமைப்பினை அளத்தல் மேற்கொள்ளப்பட்டது. அச்சந்தர்ப்பத்தின் போது நிர்ணயிக்கப்பட்ட உயரம் காணப்பட்டது. எனினும், விளிம்பு அணைகளின் மட்டத்தை பேணும் போது ஈடுபடுத்தப்பட்ட வடிவமைப்புக்களின் ஒரு பகுதிக்கு மாத்திரம் கொங்கிறீட் இடுதல் இடம்பெற்றிருந்தது. அதன் குறைந்த உயரம் மண்ணுக்குள் ஈடுபடுத்தப்பட்டது. |
| (ஐ) | கொடவெஹர பிரதேச செயலகப் பிரிவில் தம்பரொம்புவ இலிருந்து அவுலேகம வரையான | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் சரியான அளவீட்டினைப் | விளிம்பு அணைக்காக வடிவமைப்பினை ஈடுபடுத்தும் போது கொங்கிறீட் இடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வீதிக்கு பொருத்துக்கல் பிடித்து புனரமைப்புச் செய்தலானது வீதியின் விளிம்பு தடுப்பானது இரண்டு பக்கமும் மதிப்பீட்டின் பிரகாரம், வடிவமைப்பு பலகையின் இருக்க வேண்டிய உயரம் 10 அங்குலமாகும். எனினும் பௌதீக பரிசோதனையின் போது காணப்பட்ட பலகையின் உயரம் 08 அங்குலங்களாகும். அதற்கிணங்க பலகையின் உயரம் 02 அங்குலங்களால் குறைத்து ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த வேலை விடயத்திற்காகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 75,703x2/10 ஆக ரூபா 15,146 அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது. | பெற்றுக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்தல் வேண்டும். | முன்னர் வடிவமைப்பினை அளத்தல் மேற்கொள்ளப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட உயரம் காணப்பட்டது. எனினும், விளம்பு அணைகளின் மட்டத்தை பேணும் போது ஈடுபடுத்தப்பட்ட வடிவமைப்புக்களில் ஒரு பகுதிக்கு மாத்திரம் கொங்கிறீட் இடுதல் இடம்பெற்றது. அதில் குறைவான உயரம் மண்ணிற்குள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |
| (ஒ) | கல்கமுவ பிரதேச செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டினை பரீட்சித்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | நிவ்டன் அளவு 25 ஆக ஈடுபடுத்தப்பட்டிருந்தும் நிவ்டன் அளவு 40 இன் பொருத்துக் கல்லுக்குரிய சதுரமீற்றரின் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதம் ரூபா 2,266 இற்குப் பதிலாக ரூபா 2,939 பயன்படுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் சரியான அளவீட்டினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். | i. நிவ்டன் அளவு 25 ஆக தவறுதலாக பதியப்பட்டதன் காரணமாக அதனை நிவ்டன் 40 ஆக சரி செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க நிவ்டன் 40 அளவுகள் பொருத்துக் கல்லுக்குரிய ஒரு சதுர மீற்றருக்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை விகிதமான ரூபா2,939 ஆக பதியப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மதிப்பீட்டில் நிவ்டன் அளவு 25 ஆக காட்டப்பட்டு பின்னர் அது 40 ஆக வெட்டி மாற்றப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | ii. நிவ்டன் 25 ஆக தவறுதலாகக் குறிப்பிடப்பட்டிருந்த துடன் இது நிவ்டன் 40 ஆக தொழில்நுட்ப உதவியாளரால் கையொப்ப மிடப்பட்டு சரி செய்தல் மேற்கொள்ளப் பட்டது எனக் குறிப்பிடுகின்றேன். |
| (iii) | ABC தட்டின் கனம் வழமைக்கு மாற்றமாக அதிகரிக்கும் வகையில் பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் அவ்வாறான கன அளவானது உரிய 05 வீதிகளில் உண்மையாக ஈடுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | | ABC தட்டின் கனம் 8 அங்குலமாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பின்னர் அளவீடு செய்தல் இடம்பெற்றது எனவும் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் காட்டப்பட்டவாறு மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டதானது ABC தட்டில் இலகுவான அளவு எனவும் நிர்மாண வேலை முடிவுறுத்தப்படு கையில் ABC தட்டு பரப்புவதற்கு உட்படுத்தப்படுவதன் காரணமாக அதன் கனம் 6-5 அங்குலத்திற்கு இடைப்பட்ட அளவில் காணப்படலாம் எனக் குறிப்பிடுகின்றேன்.<br><br>இவ்விடயங்களுக்கு இணங்க மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது முறைகேடுகள் இடம்பெறும் நோக்கத்தில் மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. |
| (ஓ) | உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது 34 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பொல்பிதிகம பிரதேச | நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

செயலகத்திற்கு ரூபா 62,922,034 நிதிஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இப்பணத்தில் 17 குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 32,937,462 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 05 செயற்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறே 04 செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டிற்கு முன்கொண்டு செல்லப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்த துடன் 08 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. இதற்கு மேலதிகமாக 2019 ஆம் ஆண்டின் போதும் மீண்டும் 07 குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 13,790,000 நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது.

I. மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் குளங்களை புனரமைப்பது தொடர்பாக 16 குளங்கள் சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

- பொறியியலாளர் மதிப்பீட்டினை பிழையாக தயாரித்ததனால் ரூபா 9,863,754 தொகையும் செய்யப்படாத வேலைகளுக்காக ரூபா 3,576,953 தொகையும் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.
- உடன்படிக்கையின் 17 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரமின்றி ஒப்பந்த உடன்படிக்கைகளில் கையொப்பமிட்ட அனைத்து சமூக அடிப்படையிலான

செய்யப்பட வேண்டும். அவ்வாறு பிழையாக மதிப்பீட்டினைத் தயாரித்திருப்பதனால் இடம்பெற்றுள்ள முழுமையான நட்டத்தை பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர் களிடமிருந்து மீள அறவீடு செய்தல் வேண்டும்.

அமைப்புக்களினாலும் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன.

- மணல் பிரித்தெடுப்பதற்கு பொருத்தமான மண் உள்ள 03 குளங்களிலிருந்து 8,562 கனமீற்றர் மண் மதிப்பீட்டினை மிகைத்து வெட்டப்பட்டிருந்தது.
- 06 குளங்களுக்கு வான் கதவுகள் முழுமையாக பொருத்துவதற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தம் சில வேலை விடயங்கள் மற்றும் துணைக் கருவிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
- 9/2017 ஆம் இலக்க கமநல ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மீறி குளங்கள் ஆழமாக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு குளங்களின் அணைக்கட்டிற்கு அதிகளவு சேதம் ஏற்பட்டிருந்தது.
- சேற்று மண்ணை அகற்றுவதற்காக டோசர் இயந்திரங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், இந்த அனைத்து குளங்களையும் ஆழமாக்குவதற்காக பெகோ இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.
- ரூபா 10 இலட்சத்திற்கு மேற்பட்ட 08 மதிப்பீடுகள் மாவட்ட பொறியியலாளரின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், தொழில்நுட்ப உத்தியோகத்தர் தயாரித்த செயற்திட்ட மதிப்பீடானது அதற்கு மேற்பட்ட அல்லது அதற்குச் சமமான பதவி உத்தியோகத்தர்களால்

| | | | |
|---|---|---|---|
| | பரீட்சிக்கப்பட்டு சரியானது என கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும், தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தரால் அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே செயற்திட்ட மேற்பார்வையினை உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (ஔ) | கல்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் பொருத்துக் கற்களை ஈடுபடுத்தி நிர்மாணிக்கப்பட்ட 23 வீதிகள் தொடர்பாக நிவ்டன் 25 கொங்கிறீட் பொருத்துக்கல் ஈடுபடுத்தப்பட்டு வீதிகள் தயார்ப்படுத்தப்பட்டிருந்தும் நிவ்டன் 40 கொங்கிறீட் பொருத்துக்கற்கள் ஈடுபடுத்தப்பட்டு வீதிகள் தயாரிக்கப்பட்டது என மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இக்காரணத்தினால் 23 வீதிகள் தொடர்பாக ரூபா 3,032,568 மொத்த தொகையால் மதிப்பீட்டுக் கிரயம் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இப்பணத்தை செலுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. | நிர்ணயிக்கப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் சரியாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறே பிழையாக பொறியியலாளர் மதிப்பீட்டினைத் தயாரித்ததனால் ஏற்பட்டுள்ள முழுமையான நட்டத்தையும் பொறுப்பான தரப்பினர் களிடமிருந்த மீள அறவிடுதல் வேண்டும். | இப்பிரிவில் பொருத்துக் கற்கள் ஈடுபடுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 23 வீதிகளுக்காக நிவ்டன் 25 கொங்கிறீட் கற்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்கு மத்தியில் 05 செயற்திட்டங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது நிவ்டன் 25 இற்குரிய விலைகள் பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 04 செயற்திட்டங்களுக்கு இன்று வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் நிவ்டன் 25 இற்குரிய விலைகளின் பிரகாரம் விலைப்பட்டியல் திருத்தப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள செயற்திட்டங்களுக்காக மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை மீளச் செலுத்துமாறு உரிய அமைப்பிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றேன். |

**3.8 முகாமைத்துவ பலவீனம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு முன்னர் அனைத்து வீதியினையும் நிலையப் பரிசோதனை செய்து வீதியின் நிலைத்திருத்தல் மற்றும் மதகுகள், முதலிய தேவைப்பாடுகளை கவனத்திற்கு எடுத்து மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மாஸ்பொத பிரதேச செயலகப் பிரிவில் இனங்காணப்பட்ட 03 வீதிகளைத் தயாரிக்கும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தர் நிலையப் பரிசோதனை செய்து தேவைப்பாட்டினை இனங்காணவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு முன்னர் அனைத்து வீதியினதும் நிலையப் பரிசோதனை மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | பதில் வழங்கப்பட வில்லை. |
| (ஆ) | எஹடுவெல பிரதேச செயலகப் பிரிவில் எதினிமலே உனகஸ் வெவ குளத்தை புனரமைப்புச் செய்யும் மதிப்பீட்டிற்குரிய அளவீட்டுப் பத்திரம், ட்ரோவில் (CS) வரைபடம் என்பவற்றுடனான திட்டம் தயாரிக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே பெற்றுக் கொள்ளப்பட்ட அளவீட்டுப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள அணைக்கட்டின் உயரம் மற்றும் அகலம் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட அளவான 113.4 கன மீற்றரை | அளவீட்டுப் பத்திரம், ட்ரோவிங்ஸ் (CS) என்பன உரிய கோவையில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் கமநல ஆணையாளர் நாயகத்தின் 2017 யூன் 07 ஆந் திகதிய 9/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல் களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதினிமலே உனகஸ் குளத்தை புனரமைப்புச் செய்வதற்குரிய அளவீட்டுப் பத்திரம், ட்ரோவிங்ஸ் (CS) என்பவற்றை தயாரித்து தொழில்நுட்ப உத்தியோகத்தர் கோவையில் கோவை செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டின் விடய இலக்கம் 05 இன் பிரகாரம் குளத்தின் அணைக்கட்டை தயாரித்தலை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது. டோசர் இயந்திரம் மற்றும் உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி குளத்தின் அணைக்கட்டு |

| | | |
|---|---|---|
| மிகைத்து 1,174 கனமீற்றர் மண் போடப்பட்டு அணைக்கட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 யூன் 07 அந் திகதிய 09/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக மணலுடனான மண்ணை அகற்றுவதற்காக அகழ்தல் மேற்கொள்ளப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | | தயாரிக்கப்பட்டது. இதன் போது டோசர் இயந்திரங்கள் செல்ல முடியாத இடங்களுக்கு உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி மதிப்பீட்டின் பிரகாரம் மண்போட்டு தயார்ப்படுத்தப்பட்டது. இக்குளத்தில் மணுலுடனான மண்தட்டு இல்லாததுடன் குளத்தின் அணைக்கட்டிற்கு பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சியுள்ள மண் 2019-08-30 ஆந் திகதி ரூபா 158,820.00 தொகைக்கு ஏலமிடப்பட்டது. எனினும், இன்னும் அந்த மண் அகற்றப்படாது அக்குளத்தின் நீரேந்து பகுதியில் குவிக்கப்பட்டுள்ளது. அந்த ஏலமிடப்பட்ட மண் மணலை பிரித்தெடுப்பதற்காக ஈடுபடுத்தப் பட்டிருக்குமாயிந்தால் இவ்வளவு காலமும் குளத்தின் நீரேந்து பகுதியில் குவிக்கப்படமாட்டாது என விளக்கமளிக்கப்படுவதுடன் அதன் மூலம் மண்ணை அகற்றுவதற்காக அகழ்தல் இடம்பெற்றிருக்காது என உறுதிப்படுத்துகின்றேன். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஆண், பெண் சமத்துவத்தை அடைந்து அணைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளையும் மேம்படுத்துதல் மற்றும் உலகளாவிய சுற்றாடல் முறைமையின் நிலைபேறான | நிலைபேறான குறிக்கோள்களுக் குரிய இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதற்கு | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் 17 இற்குரிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டது 2030 ஆம் ஆண்டிலாகும். இந்த |

பயன்பாடு, நிரந்தர வளங்களின் முகாமைத்துவம் பாலைவனமாக்குவதற்கு எதிராக செயற்படுவதனை மீளமைத்து பாதுகாத்து மேம்படுத்துதல், நிலம் அரித்துச் செல்லப்படுவதனை நிறுத்துதல் மற்றும் புனரமைத்தல், இனவிருத்தி அழிவடைவதனை நிறுத்துதல் ஆகிய குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் போது அதற்கான இலக்குகளை அடைந்து கொள்ளும் சதவீதம் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 48.5 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இலக்குகளை அடைந்து கொள்வதன் செயன்முன்னேற்றத்தை கவனித்துப் பார்த்தலானது தற்பொழுது நாட்டில் காணப்படுகின்ற நிலைமை மற்றும் அடிப்படை தரவுகளுக்கு இணங்க பொருத்தமான குறிக்காட்டிகளை ஈடுபடுத்தியாகும். மாவட்ட செயலகத்தினால் நிறைவேற்றப்படுவதானது பல்வேறு வரிசை அமைச்சுக்களால் வருடாந்தம் அறிமுகப்படுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டங்களாகும். அவ்வாறே மாவட்ட செயலகத்தின் பல்வேறு பிரிவுகளால் முன்னைய ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அடுத்துவரும் ஆண்டுகளுக்காக திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் வரிசை அமைச்சின் மூலம் கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க நிலைபேறான 5 அபிவிருத்தி குறிக்கோள்களின் கீழ் ஆண் பெண் சமத்துவத்தினை அடைந்து கொண்டு அனைத்து பெண்களையும் பெண் பிள்ளைகளையும் முன்னேற்றுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்திற்காகவும் நிதிஏற்பாடு கிடைத்திருக்காததுடன்

| | | |
|---|---|---|
| | | கிடைத்த நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தி உரிய செயல் முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

**5. நல்லாட்சி**

**5.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| குருணாகல் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள இணையதளங்கள் பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்க கூடிய வகையில் தயார்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணைய தளங்கள் பொது மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் வகையில் தயார்ப்படுத்துதல் வேண்டும். | இச்சிக்கலை தீர்த்து வைத்தல் சம்பந்தமாக எதுவித தொழில்நுட்ப திருத்தங்களும் இடம்பெற்றிருக்கவில்லை என தயவாகத் தெரிவிக்கின்றேன். |

**6. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலகங்களில் மற்றும் பிரதேச செயலகங்களில் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் மொத்த ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 312 ஆக இருந்ததுடன் இதில் 18 வெற்றிடங்கள் ஆரம்ப மட்டத்திலும் 265 வெற்றிடங்கள் இரண்டாம் மட்டத்திலும் 18 வெற்றிடங்கள் மூன்றாம் மட்டத்திலும் 11 வெற்றிடங்கள் சிரேஷ்ட மட்டத்திலுமாகும். | அத்தியாவசியமான வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும். | 2020-06-30 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பிரதேச செயலகங்களில் 336 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்தல் மற்றும் இடமாற்றம் வழங்குதல் இடம்பெறுதலானது பொது நிருவாகம், உள்நாட்டு அலுவலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மூலமாகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மொழி பெயர்ப்பாளர் பதவி அங்கீகரிக்கப்படாதிருந்தும் 09 பிரதேச செயலகங்களில் 10 மொழி பெயர்ப்பு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | இந்த உத்தியோகத்தர் களை ஆக்கபூர்வமாக சேவையில் ஈடுபடுத்தக்கூடிய அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |